
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் - 57 தை - பங்குனி 2015



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06

அமுதம் 15 துளி 1

# கடமையின் இரகசியம்


நாம் எந்த சமூகத்தில் பிறந்துள்ளோமோ, அந்தச் சமுதாயத்தின் இலட்சியங்களுக்கும் பழக்கவழக்கங்களும் ஏற்ப நம்மை உயர்த்தவும் உன்னதப்படுத்தவும் உதவுகின்ற செயலே நமது கடமை ஆகிறது. எந்தக் கடமையையும் அலட்சியப்படுத்தக் கூடாது. தாழ்ந்த வேலைகளைச் செய்வதனாலேயே ஒருவன் தாழ்ந்தவனாகி விடமாட்டான். எந்த வேலையைச் செய்கிறான் என்பதைக்காட்டிலும், எப்படிச் செய்கிறான் என்பதைப் பொறுத்தே எவனையும் மதிப்பிட வேண்டும். நமக்கென வாய்க்கின்ற கடமைகளை எப்போதும் தயாரான முழு மனத்துடன் செய்து கொண்டே போவோம். அப்போது நிச்சயம் ஒளியைக் காண்போம்.

மனதிற்குப் பிடித்த வேலையை பரம முட்டாள் கூட செய்துவிடலாம். ஆனால் எந்த வேலையையும் தனக்கு பிடித்ததாக மாற்றி அமைத்துக் கொள்பவனே புத்திசாலி. பயன் கருதி வேலை செய்பவன்தான் தனக்கென்று வாய்த்த கடமையைப் பற்றிக் குறைப்பட்டுக் கொள்வான். ஆனால் பலனில் பற்றில்லாதவர்களுக்கு எல்லா வேலைகளுமே ஒரே மாதிரி நல்லவைதாம். எனவே நீங்கள் செய்யும் எதற்கும் பாராட்டுக்களையோ பரிசுகளையோ எதிர்பார்க்காதீர்கள். இந்த உலகில் மகத்தான மனிதர்கள் அனைவரும் யாருக்கும் தெரியாமலே வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். பிறருடைய பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது. "எதுவும் வரட்டும். உலகம் இருந்தாலும் சரி அழிந்தாலும் சரி நான் என் கடமையை மறக்க மாட்டேன்" இவை தான் பெருவீரனின் வார்த்தைகள்.

எனது சகோதரர்களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போமாக. உறங்குவதற்கு இது நேரமில்லை. கடமை ஒவ்வொன்றும் புனிதமானது. அதை பக்தியுடன் செய்வது மிக உயர்ந்த தெய்வ வழிபாடு. இதயத்தை இறைவனுக்கு அர்ப்பணித்து, கைகளால் காரியங்களைச் செய்து கொண்டு, மனிதர் இந்த உலகில் வாழ வேண்டும். இதயபூர்வமான காரியங்களைச் செய்பவனுக்கு இறைவன் என்றும் உதவி புரிவான்.

தொகுப்பு: **சி. அபிராமி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# பிரார்த்தனை



ஆயாஹி வரதே தேவி த்ர்யக்ஷரே ப்ரஹ்மவாதினி |
காயத்ரி சந்தஸாம் மாதர் ப்ரஹ்மயோனி நமோஸ்துதே ||

*-காயத்ரி ஆவாஹன மந்திரம்*

**பொருள்:** காயத்ரி தேவியே! வரங்களை அளிப்பவளே! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தால் பரம்பொருளைக் காட்டுபவளே! வேதங்களின் தாயே! சக்தியின் வடிவே உன்னை வணங்குகிறேன். கருணை கூர்ந்து இங்கே எழுந்தருள்வாய்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் - எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முக்தி ஆனந்தமே.

*-அபிராமி அந்தாதி*

**பொருள்:** அறிதற்கரிய பொருளே! அருளே உருவான உமையே! அக்காலத்தில் இமயமலையில் பிறந்தவளே! என்றும் அழியாத முக்தி ஆனந்தமாக விளங்குபவளே! உணர்தற்கரிய பெருமை வாய்ந்த வேதப் பொருளில் ஒன்றிய பொருளே! நான் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், எந்நிலையில் இருப்பினும் நின்னையே நினைத்து தியானிக்கின்றேன். நான் வணங்குவது நின் மலர் போன்ற பாதங்களையேயாகும்.

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 15** **துளி 1**

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 01 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து | 03 |
| 3. | கலியுக கற்பகதரு - கவிதை | 05 |
| 4. | பஞ்சதந்திரக் கதை | 06 |
| 5. | புண்ணிய நதிகள் | 09 |
| 6. | கலியுக கற்பகதரு | 11 |
| 7. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 13 |
| 8. | படக்கதை | 14 |
| 9. | குறுக்கெழுத்துப் போட்டி | 17 |
| 10. | தைத்திரீய உபநிஷதம் | 18 |
| 11. | சாதனையாளர் | 21 |
| 12. | யோகம் | 25 |
| 13. | பாப்பா பாப்பா கதை கேளு | 27 |
| 14. | உண்மைச் சம்பவம் | 29 |
| 15. | வாழ்க்கையில் வெற்றி | 32 |
| 16. | உங்கள் கருத்து | 34 |
| 17. | செய்திகள் | 35 |


**அட்டைப் பக்கங்களில்...**


| | | |
|---|---|---|
| 1. | அட்டைப் படம் | |
| 2. | கடமையின் இரகசியம் | ii |
| 3. | படம் தரும் பாடம் | iii |
| 4. | உங்கள் சிந்தனைக்கு... | |

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய புத்தாண்டு மற்றும் கற்பகதரு தின வாழ்த்துக்கள்.

கடந்த ஆண்டில் நாங்கள் இன்பங்களை அனுபவித்திருப்போம்; நன்மைகளும் செய்திருப்போம். அத்துடன் சில தவறுகளும் செய்திருப்போம்; துன்பங்களையும் அனுபவித்திருப்போம். துன்பங்களையும் தவறுகளையும் நினைத்து வருந்திக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. ஆனால் அந்த அனுபவங்களிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். எவ்வாறு ஒரு மரமானது உலர்ந்துபோன தன் இலைகளை உதிர்த்துவிட்டுப் புதிய தளிர்களை உருவாக்கிப் பசுமைப் பொலிவு பெறுகிறதோ அதுபோல நாங்கள் புத்துணர்வுடன் புதுவருடத்தை வரவேற்கவேண்டும். கடந்த வருடத்தில் இருந்ததைவிட இப் புதிய வருடத்தில் எம்மை நாமே முன்னேற்றிக்கொள்வோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்வோம்.

ஜனவரி 1ஆம் திகதி உலகம் முழுவதும் புதுவருடமாகக் கொண்டாடுவர். அத் தினத்திற்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அன்றுதான் குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் கற்பகதருவாகத் தன் சீடர்களுக்கு அருள்மழை பொழிந்தார். கற்பகதரு என்றால் கேட்டதனைத்தையும் கொடுக்கும். ஆனால் குருதேவரோ அதற்கும் ஒருபடி மேலே சென்று கேட்டவற்றில் நல்லதை மட்டுமே கொடுக்கும் கற்பகதருவாய்த் திகழ்ந்தார்.

குருதேவர், தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் சர்வ மத சமரசத்தை நிலைநாட்டுவதற்கும் அவதரித்தார். அவர் பிறக்குமுன் அவரது தந்தைக்கு கயா என்ற புண்ணிய தலத்தில் விஷ்ணு பகவான் கனவில் தோன்றி, தான் அவருக்கு மகனாக அவதரிக்கப்போவதாகத் தெரிவித்தார்.


அச்சமயம் கிராமத்திலிருந்த அவரது தாய் சிவனை வழிபட்டவேளை சிவலிங்கத்திலிருந்து தோன்றிய ஒளி அவரது கர்ப்பத்தில் கலந்தது. இவ்வாறு சிவ விஷ்ணு அம்சமாக குருதேவர் அவதரித்தார். பிற்காலத்தில் இந்து மதத்திலுள்ள சகல நெறிகளையும் சாதனை செய்து அனுபவம் பெற்றார்.

இதுமட்டுமல்லாமல் கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற ஏனைய மதங்களைக் கண்டைப்பிடித்து அவற்றிலும் அனுபவம் பெற்றார். எங்கெங்கோ தோன்றிய நதிகளெல்லாம் இறுதியில் ஒரே கடலில் சங்கமிப்பதுபோல் எல்லா மதங்களும் ஒரே உண்மைக்கே எம்மை இட்டுச் செல்கின்றன. எங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட "உண்மை ஒன்றே; ஞானிகள் அதைப் பலவிதமாகக் கூறுவர்" என்ற உண்மையைத் தன் வாழ்க்கை மூலம் நிரூபித்தார் குருதேவர். சுவாமி விவேகானந்தர் அவரை சர்வ தர்ம சொரூபம் என்று போற்றினார்.

குருதேவர், 'அனைத்து மக்களும் ஆன்மீக விழிப்புணர்வு பெறட்டும்' என்று ஆசீர்வதித்து, பக்தர்களுக்கு ஆன்மீக அனுபவங்களை அருளிய நாளே கற்பகதரு தினம். அவரது பக்தர்கள் ஜனவரி 1ஆம் திகதியை கற்பகதரு தினமாகக் கொண்டாடி, பிரார்த்தித்து அருள் பெறுகின்றனர்.

அட்டைப்படத்தில், சூரியன் உதிப்பதையும் கற்பகதரு விருட்சத்தையும் காண்கிறீர்கள். உதயமான இந்தப் புதுவருடத்தில் எங்கள் முயற்சியாலும் கற்பகதருவான கடவுளின் அருளாலும் வாழ்வில் முன்னேறுவோம். இதற்குத் திரிமூர்த்திகளான பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம். இவ் இதழை அவர்களது பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

# கலியுக கல்பதரு



ஆனந்தமயமான ஆனந்த ரூபம்
ஆகாய சூரியனாய் மிளிர்கின்ற தீபம்
ஆசையுறு மயக்கமுற்று அலைகின்ற சாதி,
ஆறாத துயர்நீக்கி ஒளிர்கின்ற ஜோதி

எளிமைக்கு இலக்கணமான இனியஜீவ கானம்
ஏட்டறிவு இல்லாது இழையோடும் ஞானம்
எண்ணங்கள் எட்டாத இனியஇறை பானம்
ஏழைக்காய் இறங்கிவந்து இளைப்பாறிய வானம்

கடல்மீது கரைதேடி களைக்கின்ற போது
கடிதினில் வந்திங்கு கரைசேர்க்கும் வள்ளம்
கலியுக மாந்தர் களைமிகும் போது
கறைநீக்கிக் கடைத்தேற்றும் கருணை வெள்ளம்

நீக்கமற நிறைந்திருக்கும் நித்தியத் திருவே
நீங்காத நிறையின்பம் நிந்தன் உருவே
நினைவினிலே நினைநாட கதிமோட்சம் தரவே,
நிறைவாக நிலைகொண்ட கற்பகத் தருவே!

ஆக்கம்: **ச. துளக்சன்**, பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# உண்மையே வெல்லும்



ஓர் ஊரில் தர்மபுத்தி, துஷ்டபுத்தி என இரு நண்பர்கள் இருந்தார்கள். இருவரும் பொருள் ஈட்டுவதற்காக வேலை தேடி அயல் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். வழியிலிருந்த காட்டில் தர்மபுத்திக்கு ஒரு புதையல் கிடைத்தது. அதைத் திறந்து பார்த்தபோது ஆயிரம் பொற்காசுகள் இருந்தன.

"நண்பா! நமது அதிஷ்டம், நாம் தேடி வந்த செல்வம் இங்கேயே கிடைத்துவிட்டது. அதனால் இப்பொழுதே ஊர் திரும்பி விடலாமே?" என்றான் தர்மபுத்தி. துஷ்டபுத்தியும் அதற்கு இணங்கினான். "நண்பா! இது எனக்குக் கிடைத்திருந்தாலும் நீயும் உடன் வந்ததால், இப்புதையலில் உனக்கும் சரிபாதி உண்டு" என்று கூறினான் தர்மபுத்தி. ஆனால் துஷ்டபுத்தியோ அதில் பெரும்பகுதியைத் தானே அபகரித்துக் கொள்ளத் திட்டமிட்டான். எனவே, "நண்பா! இப்பொழுது ஆளுக்கு நூறு பொன் எடுத்துக் கொண்டு மீதியை அப்படியே புதைத்து வைப்போம். இவை தீர்ந்து போனதும் மீண்டும் வந்து சம அளவு எடுத்துக் கொள்வோம்" என்றான் துஷ்டபுத்தி.

பஞ்சதந்திரக் கதை

தர்மபுத்தி நண்பனை முழுமையாக நம்பி அத்திட்டத்திற்குச் சம்மதித்தான். அதன்படி ஆளுக்கு நூறு பொன் எடுத்துக் கொண்டு மிகுதியைப் பானையுடன் சந்தடி இல்லாத ஒரு மரத்தடியில் புதைத்து வைத்தார்கள்.



துஷ்டபுத்தி அந்த நூறு பொன்களையும் தீய வழியிலேயே சீக்கிரத்தில் செலவழித்துவிட்டான். செலவுக்குப் பொன் வேண்டும். ஆனால் மீண்டும் ஆளுக்குப் பாதியாகப் பிரிப்பதை விட மிகுதி இருந்த முழுப்பொன்னையும் தானே எடுத்து விடலாம் என பேராசையோடு எண்ணினான்.

அன்றிரவு தர்மபுத்தியிடம் சென்று, "நண்பா! செலவுக்குப் பொன் வேண்டுமே. இம்முறை மீதமுள்ளதை சமமாகப் பிரித்துக் கொள்வோம்" என்றான். தர்மபுத்தியும் அதற்குச் சம்மதித்தான். உடனே புதையல் இருந்த இடத்திற்கு இருவரும் சென்றனர். பானையை எடுத்துப் பார்த்தால் பொன் ஒன்றையும் காணவில்லை. துஷ்டபுத்தி கவலைப்படுவது போல நடித்து, ஆத்திரத்தில் பானையைத் தூக்கிப் போட்டு உடைத்தான். "அனைத்துப் பொன்னையும் நீயே எடுத்துக் கொண்டு என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? எனக்குச் சேர வேண்டிய சரிபாதி பொன்னைக் கொடுக்காவிட்டால் நீதிமன்றத்துக்குப் போவேன்" என்று மிரட்டினான்.

peacock



ஆத்திரமடைந்த தர்மபுத்தி, "முட்டாளே! உளறாதே! நான் அறவழி நடப்பவன். திருட்டு போன்ற அற்ப செயல்களைச் செய்ய மாட்டேன்" என்றான். இருவரும் நீதிபதியிடம் சென்று முறையிட்டனர். இருவர் தரப்பிலும் சரியான சாட்சி இல்லாததால் தெய்வ பரீட்சை மூலம் வழக்கைத் தீர்க்க முடிவு செய்தார் நீதிபதி. அதை விரும்பாத துஷ்டபுத்தி, "நீதிபதி அவர்களே! எந்தச் சாட்சியமும் இல்லாதவிடத்தே தான், தெய்வ சாட்சியம் தேட வேண்டும். ஆனால் எனக்கு வனதேவனே வந்து சாட்சியம் சொல்லும்" என்றான். "நாளைக்கு இவ்வழக்கை விசாரணைக்கு வைத்துக் கொள்கிறேன். காட்டிற்குச் சென்று வன தேவதையின் சாட்சியத்தை விசாரித்த பின் தீர்ப்பைச் சொல்கிறேன்" என்றார் நீதிபதி.

வீடு திரும்பிய துஷ்டபுத்தி தன் தந்தையிடம், "அப்பா! இந்த வழக்குச் சம்பந்தப்பட்ட பொன் எல்லாம் என்னிடம் தான் உள்ளது. நான் இன்று இரவு உங்களை அந்தப் புதையல் வைத்த இடத்தில் இருக்கும் ஒரு மரப்பொந்தில் ஒளித்து வைத்து விடுகிறேன். காலையில் நீதிபதி அங்கு வந்து விசாரிக்கும் போது எனக்குச் சாதகமாகச் சாட்சி சொல்லி விட வேண்டும்" என்றான்.


அவ்வாறு செய்யக் கூடாதெனத் தந்தை எவ்வளவு புத்திமதி கூறியும் துஷ்டபுத்தி கேட்கவில்லை. தந்தையை ஒருவாறாகப் பேசி அழைத்துச்சென்று மரப்பொந்தில் அவரை ஒளித்து வைத்து விட்டான்.

மறுநாள் அனைவரும் அம்மரத்தடியில் கூடினர். "எங்கள் இருவரில் யார் திருடன் என்பதை வனதேவதையே சொல்லட்டும்" என்று உரக்கக் கூறினான் துஷ்டபுத்தி. உடனே பொந்தில் ஒளித்திருந்த அவனது தந்தை, "தர்மபுத்தி தான் பொன்னைத் திருடியவன்" என்று கூறினார். இதைக்கேட்ட நீதிபதி வியப்புற்றார். தர்மபுத்திக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று யோசித்தார். குற்றம் செய்யாத தர்மபுத்தி திடுக்கிட்டான். தன்னைக் குற்றவாளி என்று சொன்ன அந்த மரத்தைச் சுற்றி சுள்ளிகளையும், சருகுக-ளையும் குவித்து நெருப்பு வைத்தான். தீ பரவவே மரப்பொந்தில் இருந்தவர் தாங்க முடியாமல் வெளியே குதித்தார். அனைவரும் அவரைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். "இவர் துஷ்டபுத்தியின் தந்தை. இவை எல்லாம் துஷ்டபுத்தி தான் செய்திருக்க வேண்டும்" என்றான் தர்மபுத்தி. இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த நீதிபதி துஷ்டபுத்தியைத் தூக்கிலிட உத்தரவிட்டார். அவன் தந்தையும் அத் தீயினாலேயே இறந்தார்.

தீய வழியில் செல்லும் ஒருவரை நல்வழிப்படுத்தாமல் அவருக்குத் துணையிருப்பது தீய விளைவுகளை ஏற்படுத்தும். ஒருவர் நம்மீது உண்மையான நம்பிக்கை வைத்திருக்கும் போது அதைத் தவறாகப் பிரயோகிப்பதோ, அதிக பேராசையுடன் செயலாற்றுவதோ நற்குணமன்று. மேலாகப் பொய்யுரைப்பதும், இன்னொருவரைப் பொய் சொல்லத் தூண்டுவதும், தீயவற்றைச் செய்ய வைப்பதும், தீய வழியில் வழி நடத்துவதும் பாவமாகும். இவை நிச்சயமாகத் தீய பிரதிபலனையே மீண்டும் தரவல்லனவாகும். நன்மை விளையமாட்டாது.

"தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு இணங்கியிருப்பதுவும் தீதே"

# புண்ணிய நதிகள்



**கோதாவரி- பாகம் I**

ஆதி அந்தமில்லாத சிவபெருமானின் அடி முடியைக் காண்பதற்குப் பிரம்மாவும் விஷ்ணுவும் முயன்ற கதை எல்லோருக்கும் தெரியும். சிவபெருமானின் முடியைத் தான் கண்டதாகப் பிரம்மா பொய்யுரைத்தார். இதனால் சினம் கொண்ட சிவபெருமான் "உலகில் உன்னை யாரும் பூஜிக்க மாட்டார்கள்" என்று சாபம் கொடுத்தார்.

"நான் மன்னிப்புக் கேட்டும் என்னைக் கல் மனம் கொண்டு சபித்து விட்டீர்களே இது நியாயமா? எனவே நீங்களும் கற்களும் காடுகளும் கொண்ட மலையாகக் கடவை" என்று பிரம்மா சிவனுக்குச் சாபம் கொடுத்தார். பிரம்மனின் சாபத்தால் சிவன் ஒரு பெரும் பர்வதமாக மாறினார். கோபம் தணிந்த பிரம்மா சில நாட்களில் அங்கு வந்து சாபத்தைப் போக்க முன் வந்தார்.



ஆனால் சிவபெருமான் தாம் மலை வடிவிலேயே அங்கு எழுந்தருளி இருப்பதாகவும் தான் பேத பாவனை இன்றி நான்முகன் பெயர் கொண்டு விளங்குவதாகவும் கூறினார். ஆதலால் அம்மலை 'பிரம்ம கிரி' என்று பெயர் பெற்றதாகப் புராணம் கூறுகிறது.

இந்தப் பிரம்ம கிரியிலேதான் தக்ஷிண கங்கா எனப் புகழப்படுகின்ற புனித கோதாவரி நதி உற்பத்தியாகிறது. இந்நதிக்கு கோதை, சத்தஸ் ரோதை, சத்தியவதி, சத்யஷரூபி, சுவாஷினி, சுலபை, வேகவர்த்தை, மலாபிதை, பத்தவிட்டதை எனப் பல பெயர்கள் உள்ளதாகப் புராணங்கள் கூறுகின்றன.

கங்கை மண்ணுலகிற்கு வந்து பாரதம் வளம் பெறக் காரணமாய் இருந்தவர் பகீரதன்.


அக்கங்கையே புனர்ஜென்மம் எடுத்து கோதாவரி என்னும் நாமம் பெற்று தென்பாரதம் வளம் அடையக் காரணமாக இருந்தவர் மகரிஷி கௌதமர். இந்த அரிய சாதனையை மகரிஷி எவ்வாறு நிகழ்த்தினார் என்று பிரம்ம புராணத்திலும் நாரத புராணத்திலும் விரிவாகக் கூறப்படுள்ளது.

ஒருமுறை பிரம்மதேவன் யாவருக்கும் விளக்கும் வண்ணம் ஒரு வேள்விக்கு ஏற்பாடு செய்தார். குறித்த நாளில் யாகபூமியான பிரயாகையில் யாகம் ஆரம்பிக்கப்பட இருந்தது. குறிக்கப்பட்ட நேரத்தில் பிரம்மதேவன் யக்ஞவேதிக்கு அஸ்திவாரம் எடுப்பதற்காக நிலத்தைத் தோண்டினார். அப்படித் தோண்டிக் கொண்டு போகும் பொழுது நிலத்தடியில் ஒரு பெரும் பெட்டி இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். மற்றவர்களின் உதவியுடன் அப்பெட்டியை கவனத்துடன் வெளியே எடுத்தார். எல்லோரும் ஆவலுடன் பெட்டியைத் திறந்தனர்.



அங்கே பேரழகு பொருந்திய பெண்ணொருத்தி அப்பெட்டியினுள் இருந்தாள். அங்குள்ள அனைவரும் அவள் அழகில் மயங்கினர். அவளைத் தத்தமது மனைவியாக்க ஆசைப்பட்டனர். இதை உணர்ந்த பிரம்மா எல்லோரும் தான் கூறப் போவதைக் கவனமாகக் கேட்கும்படி உத்தரவிட்டார். பின்பு அவர்களைப் பார்த்து "நிலத்தில் புதைத்திருந்த பெட்டி என்னால் கண்டு பிடிக்கப்பட்டது, ஆகவே பெட்டியும் அதனுள் கிடைத்த பொருளும் எனக்குரியவை. இந்த அழகி என் மகள் ஆகின்றாள். இவளுக்கு உங்கள் எதிரிலேயே 'அகல்யா' என்று பெயர் சூட்டுகின்றேன். இவளை இங்குள்ள எந்த ஆண் மகனும் மணக்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை, இப்பூவுலகை யார் ஒருவர் கால்களால் வலம் வந்து முதலில் சேருகின்றாரோ அவர் தான் இவள் கரம் பற்றலாம்" என்று கூறினார். உடனேயே உலகை வலம் வர நடக்கத் தொடங்கி விட்டனர்.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்...)




இறைவனை நிதர்சனமாக நேரில் காண வேண்டும் என்றும், உலகியல் ஆசைகளை பூர்த்தி செய்யும் எவையும் இறைநிலையை அடைவதற்கு உதவாது எனவும் உணர்ந்திருந்தார் கதாதரர். இதனால் முதலில் மதுர்பாபு காளிதேவி விக்கிரகத்தை அலங்கரிக்கும் பணியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டியபோது மறுத்தார். அந்நேரத்தில் ஹிருதயர் காளிதேவி விக்கிரக நகைகளுக்கான பொறுப்பை ஏற்றதும், அலங்கரிக்கும் பணியை ஏற்றுக் கொண்டார்.

ஒவ்வோர் மனிதனின் வாழ்வில் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஏற்படும் சிலநிகழ்வுகள் அவனின் அன்றாட இயக்கங்களுக்குத் தடையாக அமைந்து விடுகின்றது. இது தனிமனிதனிக்கு மட்டுமல்ல, சிலசந்தர்ப்பங்களில் ஸ்தாபனங்களுக்கும் பொதுவாக அமைந்துவிடுகின்றது. அவ்வாறோர் சம்பவம் தட்சிணேஸ்வரம் காளிதேவிகோயிலிலும் நடைபெற்றது.

கதாதரர் பணியை ஏற்றுக்கொண்ட சிலநாட்களில் கோகுலாஷ்டமிதிதியும் வந்தது. இது துவாரகாயுகத்தில் உலகில் தர்மத்தை நிலைநாட்டிய கிருஷ்ணர் பிறந்ததிதி ஆகும். இக் கிருஷ்ணரின் பிறந்த ஜன்ம திதி இந்துக்களினால் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது.



தட்சிணேஸ்வரக் காளிகோவிலிலும் கிருஷ்ணர், ராதாசமேதராக, ராதாகாந்தராக எழுந்தருளியுள்ளார். எனவே காளிகோவிலிலும் கோலாகலமாகப் பூஜைகள் செய்ய ஏற்பாடுகள் மதுர்பாபு தலைமையில் நடைபெற்றது. ஏற்பாடுகளுற்கு ஏற்ப, கோகுலாஷ்டமி அன்று பூஜை வழிபாடுகள் எல்லாம் கோவிந்தருக்கும் சிறப்பாகச் செய்யப்பட்டது.

ஆனால் உச்சிக்காலப் பூஜையும் நைவேத்தியமும் நிறைவேறிய பின்னர், அர்ச்சகரான ஷேத்திரநாதர் ராதாவின் விக்கிரகத்தைப் பள்ளியறையில் வைத்துவிட்டு, கோவிந்தரின் விக்கிரகத்தை எடுத்துச் சென்றுகொண்டிருந்தார். திடீரெனக் கால் தடுக்கிக் கீழே விழுந்தார். விழுந்த வேகத்தில் கோவிந்தரின் ஒருகால் உடைந்துவிட்டது.

இச்சம்பவத்தினால் ராதாகாந்தரின் அன்றாட பூஜை பணிகளில் ஓர் தேக்கத்தையும் இவ்விடயத்தில் எவ்வாறான ஓர் முடிவை எடுப்பது என்று தீர்மானிக்க முடியாதளவில் குழப்பத்தை மதுர்பாபுவிற்கும் ராணிராசமணிக்கும் தோற்றுவித்தது. இராணியும், மதுர்பாபுவும் கல்கத்தா நகரிலுள்ள பண்டிதர்கள் எல்லோரையும் அழைத்து உடைந்த கோவிந்தரின் சிலைகுறித்து ஆலோசனை கேட்டனர். எல்லோருடைய ஆலோசனையும் உடைந்த சிலையை கங்கையில் கரைத்துவிட்டு, புதிய சிலை ஒன்றைச் செய்து பூஜை செய்யுமாறே அமைந்திருந்தது. ஆனால் மதுர்பாபுவிற்கு இப்பதில் திருப்திகரமாக அமையவில்லை. மேலும் இதுவரை காலமும் பூஜை செய்துவந்த சிலையைக் கங்கையில் கரைப்பது அவர் மனதில் ஒருநெருடலை ஏற்படுத்தியது. மேலும் கதாதரர் பரவசநிலையில் சிக்கலான பிரச்சனைகளுக்குச் சுலபமான தீர்வு கொடுத்ததை அறிந்திருந்தார்.



ஒருநாள் சின்னப் பட்டார்சாரியாரான கதாதரரிடம் ராணியும் மதுர்பாபும் சென்று கோவிந்தர் சிலையின் கால் உடைந்ததையும் அதுகுறித்தான பண்டிதர்களின் முற்றான முடிவையும் தெரிவித்து, இது குறித்துகதாதரரின் அபிப்பிராயத்தையும் வேண்டி நின்றனர். சம்பவத்தை முழுமையாகக் கேட்ட கதாதரர், தன்நிலை மறந்து பரவசநிலையில் ஆழ்ந்தார். பரவசநிலையில், “ராணியின் மருமகன் கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டால், அவரை புறந்தள்ளி அவருக்குப் பதிலாகப் புது மருமகனை ஏற்பாடுசெய்வார்களா? அல்லது அவருக்குச் சிகிச்சை அளித்து உடைந்த காலைச் சரி செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்களா?

உடைந்த காலைச் சரி செய்யத்தானே முயற்சி செய்வீர்கள்! இங்கும் அதே முறைதான். விக்கிரகத்தைச் செப்பனிட்டு வழிபாட்டைத் தொடரலாம். எதற்காகத் தூக்கி எறியவேண்டும்?''என்றார். அனைவரும் வியப்பால் வாயடைத்துப் போனார்கள். உண்மைதானே!

கோவிலில் விக்கிரகம் உயிருணர்வுடன் இருக்குமானால் பக்தர்களின் ஆழ்ந்த அன்பினாலும் பக்தியினாலும் இறைவனின் கருணையினாலும் தான் உண்டாகிற்று. ஆகவே உள்ளத்தில் பக்தியும் அன்பும் நம்பிக்கையும் இருக்கும் போது உடைந்த விக்கிரகத்தில் ஏன் சாந்நித்தியம் இருக்கமுடியாது?

இவ்வளவு எளிமையான வழி ஒருவர் மனதில் கூடத் தோன்றவில்லையே! மேலும் அனைவருக்கும் இப்பதில் பொருத்தமானதாகவும்பட்டது. பின்னர் கதாதரரே உடைந்த கோவிந்தரின் விக்கிரகத்தின் காலை தாமே மிக அழகாக சீர்செய்தார். இன்றும் அதை உன்னிப்பாக அவதானிப்பவர்களால் கூட, இச்சிலை உடைந்து சீர் செய்யப்பட்டது என அடையாளம் காணமுடியாது. தன் பணியின் கவனக் குறைவிற்காக ஷேத்திரநாதர் பணிநீக்கம் செய்யப்பட்டார். மேலும் ராதாகோவிந்தரைப் பூஜைசெய்யும் பணி கதாதரருக்கு வழங்கப்பட்டது.

( மிகுதி அடுத்த இதழில் தொடரும்...)


ஆக்கம்: **உ. சசிதரன்**, பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | ல | 2 ய | 3 ம் | ■ | ■ |
| ன் | ■ | 4 ஆ | கா | 5 ய | ம் |
| 6 மா | 7 ம் | ண் | ய | க் | டு |
| ■ | 8 ஓ | ம் | ■ | ஞ | ■ |
| 9 க் | வி | ர | 10 கி | ம் | 11 க |
| 12 ரி | ய | ■ | ளி | ■ | தி |


**கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்**


கதை: சி.அபிராமி **கபடன் கற்ற உண்மை** படம்: தே.நிரோஷன்





5 சத்தம் கேட்ட காவலர்கள் ஓடி வந்தார்கள்.
யாரது??
ஐயோ! நன்றாக மாட்டிக் கொண்டேனே! அதோ புதர்! அதில் ஒளிவோம்.
6 திருடனைக் காணாத காவலர்கள் தம் இருப்பிடம் திரும்பினர்.
விடிந்தால் கண்டுபிடித்து விடுவார்களே! என்ன செய்வது? ஆ! சரியான யோசனை!!
யாரையும் காணவில்லையே!
7 தூரத்தில் காவலர்கள், இரவில் குளிர்காய்வதற்காக மூட்டிய விறகில் எரிந்து முடிந்த சாம்பல் இருந்தது.
இனி யாரும் என்னை அடையாளம் காண முடியாது.
8 சாம்பலைப் பூசிக் கொண்டு அருகிலிருந்த மரத்தடியில் அமர்ந்து கொண்டான். விடிந்ததும் அங்கு வந்த காவலர்கள்...
வணங்குகிறேன் சுவாமி!




ஒரு மனிதன் நல்ல எண்ணங்களையே எண்ணி, நற்செயல்களையே செய்து வந்தால், அவனது மனத்தில் நல்லனவையே பதிந்து, அவை அவனை அறியாமலேயே அதைப்போன்ற நல்லனவற்றைச் செய்ய அவனைத் தூண்டும். அவனாக தீயனவற்றைச் செய்ய வேண்டுமென்று விரும்பினாலும் நன்மையின் மொத்த வடிவமாக உள்ள அவனது மனது அவனை அவ்வாறு செய்ய விடாது தடுத்துவிடும்.



-சுவாமி விவேகானந்தர்

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 |
| | ■ | 5 | | | |
| 6 | | | | ■ | ■ |
| | ■ | 7 | | | 8 |
| 9 | 10 | ■ | | ■ | |
| ■ | 11 | | ■ | 12 | |

விடைகள்
அடுத்த இதழில்...

**இடமிருந்து வலம்**

1. திருடனாக இருந்து முனிவராக மாறினார்.
5. ஒரு நரம்புக் கருவி (திரும்பியுள்ளது).
6. சொத்து.
7. ஒரு செயலைச் செய்யும்போது ______ உடன் செய்ய வேண்டும்.
9. உள்ளம் பெருங்கோயில் _____உடம்பு ஆலயம். (திரும்பியுள்ளது)
11. திருமால் கையிலிருக்கும் சக்கராயுதத்தின் மறுபெயர் (திரும்பியுள்ளது).
12. அறிவு (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**


1. தேவியை இடதுபுறம் ஏற்றதால் சிவனுக்கு ஏற்பட்ட திருநாமம்.
2. மதுரையில் வீற்றிருக்கும் அன்னை.
3. பழைய நூல்களைக் குறிக்கும் பெயர் (குழம்பியுள்ளது).
4. _____சங்கம் மனதைத் தூய்மைப்படுத்தும்.
8. செருக்கு / அகங்காரம் (தலைகீழ்).
10. உலகம் அழியும் காலம்.

ஆக்கம்: **வ. வானதி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# தைத்திரீய உபநிஷதம்

வாழ்க்கையைத் தன் போக்கில் போகவிடாமல் உணர்ந்து அனுபவித்து வாழுமாறு இந்த உபநிஷதம் கூறுவதாக முதலில் கண்டோம். எத்தகைய அம்சங்களால் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியுமோ அவற்றை முதற் பகுதியில் கண்டோம். இந்த இரண்டாம் பகுதி நம்மை இன்னும் மேலே செல்லத் தூண்டுகிறது.

உலகின் சிந்தனையாளர்களுள் பலரை ஆக்கிரமித்த கேள்வி இது. மனிதன் என்பவன் யார்? அதாவது நாம் யார்? உண்மையில் நாம் யார்? - உடம்பா? மனமா? இவற்றின் சேர்க்கையா? இவைதவிர வேறு ஏதாவதா? மொத்தத்தில் மனிதனைப் பற்றிய ஒரு சிறந்த ஆராய்ச்சியாக அமைகிறது இந்தப் பகுதி.




**2. ஆனந்தவல்லி**

நமது வாழ்க்கை என்பது ஒரு பயணம். எங்கிருந்து புறப்பட்டோம், எங்கே போகிறோம் என்பது தெரியாத ஒரு பயணம். இதனை அறிவதற்கான முயற்சியே ஆன்மீகம். நாம் புறப்பட்ட இடம் இறைவன். நாம் சேரவேண்டிய இடமும் அவரே என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. அப்படியானால் அவரைத் தேடவேண்டும். அதுவே வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கமுடியும்.

இறைவன் உண்மை வடிவினர், எல்லையற்றவர் அனைத்தையும் கடந்தவரான அவர் இதயக்குகையில் வீற்றிருக்கிறார். இந்த உண்மையை உணர்பவன் அனைத்தையும் அறிபவரான அந்த இறைவனை அடைகிறான். படைப்பு ஒருமாபெரும் புதிர். இந்தப் படைப்பின் அடிப்படையாக 5 மூலங்கள் அமைந்துள்ளன. பஞ்சபூதங்களின் விளைவாக மனிதனை உபநிஷதங்கள் காண்கின்றன.

நம்மில் ஆன்மாவாக விளங்குகின்ற இறைவனிலிருந்து வெளித் தோன்றியது. வெளியிலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி, பூமியிலிருந்து செடிகொடிகள், செடிகொடிகளிலிருந்து உணவு, உணவிலிருந்து மனிதன் தோன்றினான். இவ்வரிசைப்படி படைப்பின் சிகரமாக மனிதன் விளங்குகிறான். ஆனால் மனிதன், அதாவது நாம் யார்? மனிதன் என்று சொல்லும்போது அவனது ஆளுமையைக் குறிப்பிடுகிறோம். ஆளுமை என்பதை 5 அடுக்குகள் கொண்ட ஒரு தொகுதியாகக் காண்கிறது. அன்னமய ஆன்மா, பிராணமய ஆன்மா, மனோமய ஆன்மா, விஞ்ஞானமய ஆன்மா மற்றும் ஆனந்தமய ஆன்மா என்பவையே அவை.



இந்த உடம்புகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு உணர்வு நிலையில் உள்ளவை பரிணாமத்தின் பல்வேறுபடிகளில் உள்ளவை, குழந்தைகளிலும் காட்டுமனிதர்களிலும் முதல் இரு உடம்புகள் மட்டுமே முற்றிலுமாகச் செயல் நிலையில் உள்ளது. நாகரிகமும் அனுபவம் வாய்ந்தவர்களிடம் மன உடம்பும் முழுமையாகச் செயற்படும் பக்குவம் பெற்றவர்களில் புத்தி-உடம்பு படிப்படியாக விழித்தெழத் தொடங்குகிறது. ஐந்தாவதான ஆனந்த உடம்பு அனுபூதிபெற்ற மகான்களிடமே முழுமையாகச் செயற்படுகிறது.

படைப்பு என்பது ஒருசுழற்சியாக நடைபெறுவதாக வேதங்கள் கூறுகின்றன. அதாவது திடீரென எதுவும் தோன்றவில்லை. படைப்பும் ஒடுக்கமும் தொடர்ந்து மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. படைப்பிற்கு ஆரம்பம் இருப்பது இயலாதகாரியம். ஆரம்பத்தில் எதுவும் இல்லை என்றால் அனைத்தும் ஒடுக்கநிலையிலிருந்தன என்பது பொருள்.


கடவுள் ஆனந்தத்தின் இருப்பிடம் பயமின்மையின் உறைவிடம் இயற்கையின் தலைவரும் அவரே. அடுத்து 3ஆம் பகுதியான பிருகுவல்லீ பற்றிப் பார்ப்போம்.

### 3. பிருகுவல்லீ

வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டால் நாம் வாழமுடியும் என்பதை முதற் பகுதியில் கண்டோம். இரண்டாம் பகுதி நம்மைப்பற்றி ஆராய்ந்தது. உலகம், மனிதன் ஆகிய இரண்டிற்கும் தலைவர் கடவுள். கடவுள் பற்றி ஆனந்தவல்லீயில் ஆரம்பித்த ஆராய்ச்சி இப்பகுதியில் தொடர்கிறது. வருணமுனிவர் தன் மகனான பிருகுவிற்குப் போதிக்கின்ற பகுதியாதலால் இந்தப் பகுதி பிருகுவல்லீ என்றுபெயர் பெறுகிறது.



கடவுள் யார் என்று பிருகு கேட்ட கேள்விக்கு "உணவு, பிராணன், கண், காது, மனம், பேச்சு ஆகியவையே கடவுள்" என்று பதில் கூறினார் வருணர். தவத்தின் மூலம் தாம் கண்ட உண்மைகளை பிருகு தெரிவித்தபோது அவற்றை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளாமல் முயற்சியைத் தொடருமாறு கூறினார். 5 படிகள் தாண்டிய பிறகு இதயவெளியில் ஒளிரும் உண்மையை பிருகு உணர்கிறான். இங்கும் பயணம் நின்றுவிடவில்லை. ஆனால் இதயத்தில் ஆன்மாவை உணர்வது கடவுளை அறிவதற்கான முயற்சியில் ஒரு முக்கியபடி.



இதயத்தில் ஆன்மாவை உணர்ந்த ஒருவனுக்கு உணவுச் செல்வம், புனிதப் பேரொளி என்பவையும் கிடைக்கும். **"உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள். அது எவ்வாறு விழித்தெழுகிறது என்று பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து, தன்னுணர்வுடன் செயலில் ஈடுபடுமானால் சக்தி, பெருமை, நன்மை, தூய்மை போன்ற மேலானவை எல்லாம் வரும்"** என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

தெய்வ சிந்தனையுடன் வாழ்க்கையை வளம் பெறச் செய்வதும் வளமாக வாழ்வதும் இறைவனின் மகிமையைப் போற்றுவதேயாகும். தெய்வ சிந்தனையுடன் செல்வத்தைப் பெருக்கி வளமாக வாழவேண்டுமெனக்கூறி இந்த உபநிஷதம் இனிதே முற்றுப்பெறுகிறது.

ஆக்கம்: **ஜெ.காயத்திரி**, தரம் 10,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# முழுமை பெற்ற பாதி மனிதன்

நாம் வாழ்க்கையில் இல்லாத, கிடைக்காத விடயங்களைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டே காலத்தை வீணாக்குகின்றோம். முழுமையான உடலிருந்தும், எதையும் தேர்ந்தெடுக்கக் கூடிய சுதந்திரம் இருந்தும் வாழ்வின் பாதிக்கு மேல் திருப்தியின்றியே கழிந்து விடுகிறது.



ஏழை பணக்காரனாக ஆசைப்படுகிறான். பணக்காரனுக்கோ தன்னிடம் எவ்வளவு செல்வம் இருப்பினும் அதில் திருப்தியில்லை. பரிபூரணமான உடல் இருந்தும் அதில் நிறைவு கொள்ளாமல் அழகாக இல்லையே என குறைப்படுவதும் உண்டு. அவ்வாறிருக்கையில், ஒரு விபத்திலே உடலின் பாதியை இழந்தும் தன்னம்பிக்கையையும், துணிவையும் இழக்காமல் மன உறுதியுடன் வாழ்வை வெற்றி கொண்ட ஒருவர் தான் பெங் சுய்லின் (Peng Shuilin).

## சாதனையாளர்


பெங் சுய்லின் சீனாவின் ஹூனான் என்ற மாகாணத்தில் பிறந்தார். 1995ம் ஆண்டு சென்சென் என்ற இடத்தில் நடந்த விபத்தில் சரக்கு வண்டி (Freight truck) ஒன்று பெங் சுய்லின் உடலை இரண்டாகத் துண்டித்து விட்டது.

30 சதவீதம் மட்டுமே அவர் உயிர் பிழைப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர். சத்திர சிகிச்சையின் போது இடுப்பின் கீழ்ப்பட்ட பகுதியைத் துண்டிக்க வேண்டி ஏற்பட்டது. வைத்தியர்கள் பெண்ங் இன் இடுப்பிற்குக் கீழ்ப்பட்ட பகுதியை நீக்கி உடலைத் தைத்தனர்.




இதனால் தற்போது பெண்ங் இன் உயரம் வெறும் 2அடி 7அங்குலம் மட்டுமே.

பெண்ங் இன் வாழ்வில் சுமார் இரண்டு வருடங்கள் தென் சீனாவின் சென்சென் நகர வைத்தியசாலையிலேயே கழிந்தது. எண்ணற்ற சத்திரசிகிச்சைகளுக்கு முகங்கொடுத்தார். உடலின் பெரும்பாலான உறுப்புகளை சீராக இயங்கச் செய்வதற்காக ஒரு தொடர் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. வலிகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டார். தளராமல் உடல், உறுப்புகளுக்கான பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். தொடர்ந்து அவர் செய்த முயற்சியின் காரணமாக தடைகளைக் கடந்தார்.




சீனா பீஜிங்கின் புனர்வாழ்வு மற்றும் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் பெண்ங் இன் நிலையைப் பார்த்து மனமிரங்கினர். அவர் யாரது உதவியும் இன்றி நடப்பதற்காகத் தனித்துவமான ஒரு வழி செய்யத் திட்டமிட்டனர்.




2007ஆம் ஆண்டு அதிநவீனமாக, இரண்டு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டு அவரது உடலைத் தாங்கக் கூடியவாறு ஒரு அரைக்கோள உறையை உருவாக்கினர்.

Reciprocating Gait Orthosis (RGO) என அழைக்கப்படும் இச்சார்புறுப்பின் இரு கால்களும் ஓர் இழையால் தொடுக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் ஒரு கால் முன்னால் அசையும் போது மற்றையது பின்னால் செல்லும்.



பென்ங் தன் உடலை ஒரு பக்கமாகத் திருப்புகையில் அந்தப் பக்கம் இருக்கும் கால் முன்னால் செல்லும். மறுபுறம் திரும்பும் போது மறுகால் முன் செல்லும். இவ்வாறு பென்ங் தன் உடலை அசைப்பதன் மூலம் நடக்க முடியும். அவரது செயற்கைக் கால் மற்றும் உடற்பகுதியுடன் நடப்பதற்குப் பயிற்சி பெற்றார். புனர்வாழ்வு மையத்தின் தாழ்வாரங்களிலும், நடைபாதையிலும் நடந்து இடைவிடாது பயிற்சி செய்தார்.

என்ன அற்புதம்! விபத்து நடந்து பத்து வருடங்களின் பின் பென்ங் மீண்டும் நடக்கத் தொடங்கினார். அரைவாசி உடலுடன் யார் உதவியும் இன்றியே பென்ங்கால் நடக்க முடிகிறது. உயிர் பிழைப்பதே அரிதெனக் கூறப்பட்ட ஒருவர், உதவியின்றி நடமாடுவது வைத்தியர்களை வியப்பில் ஆழ்த்தியது. “நாங்கள் பரிசோதித்துப் பார்த்ததில் பென்ங் அவரது வயதை ஒத்தவர்களை விடவும் ஆரோக்கியமாகவும் சுகதேகியாகவும் இருக்கிறார்” என்கிறார் வைத்தியசாலையின் உபதலைவர்.

விபத்தினால் அவர் உடல் பாதிக்கப்பட்டாலும் அவர் மனோதிடத்தையும், ஆர்வத்தையும் எதனாலும் முடக்க முடியவில்லை. தோல்வியைக் கண்டு துவளாமல் உற்சாகத்துடன் வாழ்வில் முன்னேறினார். பென்ங் சொந்தமாக ஒரு சலுகை விலை அங்காடியை ஆரம்பித்தார். “அரைவாசி மனிதனின் அரைவாசி விலை கடை” (Half man – Half Price Store) எனப் பெயரிட்டார். பென்ங் தற்போது ஒரு வெற்றிகரமான தொழிலதிபர். எல்லா அங்கவீனர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

வெறும் 2அடி 7அங்குலம் உயரமே கொண்ட பென்ங் தான் மட்டும் நன்மையடைந்தால் போதும் என்ற சுயநல எண்ணமின்றி, வைத்தியசாலைகளுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்கள், அங்கவீனர்கள் கஷ்டத்திலிருந்து எவ்வாறு மீள்வது



என ஆலோசனைகளை வழங்கி அவர்களை ஆற்றுப்படுத்தி வருகின்றார். சக்கர நாற்காலியில் பல இடங்களுக்கும் சென்று இயலாமை, குறைபாடுகளிலிருந்து மீண்டு வருவது எப்படி, வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி என்று உரைகளை நிகழ்த்தி வருகிறார்.

அவரது மனோதிடம் போற்றுதற்கரியது. தனது குறைகளை எண்ணி வருந்தவில்லை. குறை கூறிக்கொண்டு இருக்கவுமில்லை. அவரது உற்சாகமும், ஊக்கமும் அவர் வாழ்வின் இரகசியம். எந்த விடயமும் அவரை முடக்கவில்லை.

எமக்கு உடல் முழுமையாக உள்ளது. பாதங்கள் உள்ளது. தற்போது பாதங்கள் அற்ற ஒரு மனிதனைச் சந்தித்து விட்டீர்கள். பென்ங் இன் வாழ்க்கை பொறுமை, சகிப்புத்தன்மையைக் காட்டும் ஒரு ஆச்சரியமான, மனதில் பதித்து வைக்க வேண்டிய பாடமாகும்.

மிகப்பெரிய கஷ்டத்தில் இருந்து வெளியேறி, தடையைத் தகர்த்தெறிந்து வெற்றி பெற்ற ஆர்வமிக்க ஒருவரைப் பற்றித் தெரிந்து கொண்டோம். உங்கள் வாழ்வில் ஓர் அற்பமான விடயத்தைப் பற்றிக் குறைப்படப் போகிறீர்களா? வேண்டாம். அத்தருணத்தில் பென்ங் சுய்லினை நினைவில் கொள்ளுங்கள். வாழ்வில் வெற்றி பெற எண்ணம் கொள்ளுங்கள்.

உலக வரலாறு என்பது தன்னம்பிக்கையுடைய சிலரின் வரலாறே. அத்தகைய தன்னம்பிக்கை நம்முள் இருக்கும் தெண்வத்தன்மையை வெளிப்படுத்துகிறது!

ஆக்கம்: **வ. வானதி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# யோகம்

கடந்த இதழ் வரை சூரியநமஸ்காரத்தின் முதல் பத்து நிலைகளையும் பார்த்துவிட்டோம். இந்த இதழில் இறுதி இரண்டு நிலைகளையும் பார்ப்போம்.

**பதினோராம் நிலை:**

1. செய்முறை:

- பத்தாம் நிலையிலிருந்து வெளிமூச்சு விட்டபடி வலது காலை முன்புறம் கொணர்ந்து இரண்டு பாதங்களையும் தரையில் தொட்டபடி உள்ளங்கைகளுக்கு இடையில் வைக்கவும்.
- உச்சந்தலை தரை நோக்கிக் கவிழ்ந்து, முழங்கால்களை ஒட்டியபடி முகத்தினைக் கொண்டு வரவும்.
- இது இரண்டாம் நிலை போன்றது.



2. சுவாச நடை: வெளி மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:

- தோள்கள் காது மடல்களைத் தொட்டவாறு இருக்க வேண்டும்.
- முழங்கால்களை மடக்குதல் கூடாது.
- கடுமையான வலி உணர்வின்றி முடிந்தவரை சுகமாக உடலை வளைத்தல் போதுமானது.


4. பலன்கள்:

- தண்டுவடம் வளையும் தன்மையடையும்.
- வயிற்று நாளங்கள் சிறப்பாகச் செயற்படும்.
- ஜீரண மண்டலம் வலிமை பெறும்.
- முகத்தசைகளுக்கும், கண்கள், மூளை போன்ற உறுப்புகளுக்கும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.
- நரம்புமண்டலம் தூண்டப்படுவதன் மூலமாக நல்ல நினைவாற்றல் கிடைக்கும்.

**பன்னிரண்டாம் நிலை:**

1. செய்முறை:

- மெதுவாக உடலை நேராக நிமிர்த்தி உள்மூச்சு எடுத்தபடி தண்டுவடத்தை நேராக்கி நிமிர்ந்து நிற்கவும்.
- நெஞ்சுக்கு முன்னே கைகள் கூப்பியவாறு நமஸ்கார முத்திரையுடன் நன்றாக நிமிர்ந்து நேராக நிற்கவும்
- இது தொடக்க நிலையைப் போன்றது. இறுதியிலும் அந்நிலையிலேயே முடிவுறும்.



2. சுவாச நடை: உள் மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:

- உடலை முழுவதுமாகத் தளர்த்தி நிற்க வேண்டும்.
- கண்களை மூடியபடி சுவாசத்தைச் சீர்ப்படுத்த வேண்டும்.

4. பலன்கள்:

- மனம் ஒரு நிலைப்படும்.
- விழிப்புணர்வு அதிகரிக்கும்.
- உடல் ஓய்வடையும்.


இந்தப் பன்னிரண்டு நிலைகளும் சேர்ந்தது ஒரு சுற்று ஆகும். இவ்வாறு சூரியனுக்குரிய பன்னிரண்டு நாமங்களைக் கூறி, பன்னிரண்டு தடவைகள் செய்ய வேண்டும். இல்லையெனில், முதல் மூன்று நாமங்களை மட்டும் கூறி மூன்று தடவை செய்யலாம். இத்துடன் சூரியநமஸ்காரம் நிறைவுற்றது.

அடுத்த இதழிலிருந்து ஆசனங்களைப் பற்றிப் பார்ப்போம்.


ஆக்கம்: **இ. பிரகலாதன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# பாப்பா பாப்பா கதை கேளு...

தெருவோரமாகப் படுத்திருந்தது ஒரு நாய். நாயின் அருகே ஒரு பூனை வந்து. "நாயாரே! இப்படிச் சோர்வோடு படுத்திருக்கின்றீரே பக்கத்துத் தெருவில் ஒரு திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருமணம் முடிந்து விருந்து உணவு பரிமாறுவார்கள். எல்லோரும் விருந்து சாப்பிட்ட இலைகளை மண்டபத்தின் பின்புறமாகக் கொட்டுவார்கள். நீ அங்கு சென்றால் உனக்கு விதவிதமான உணவுகள் கிடைக்கும்" என்றது பூனை.




அதனைக் கேட்ட நாய்க்கு ஆத்திரம் ஏற்பட்டது. "பூனையே! என்னை என்ன எச்சிலிலைச் சாப்பிடுகிறவன் என்று நினைத்தாயா? நான் எச்சிலிலைகளை எல்லாம் சாப்பிடமாட்டேன். என் எஜமானாரே எனக்குப் போதிய உணவு தருகின்றாரே! அதன் பின்னர் நான் ஏன் எச்சிலிலைகளை உண்ணவேண்டும்?"என்று கேட்டது.




"நாயாரே! நீர் விதவிதமான உணவினைச் சாப்பிடவேண்டும் என்றஆசையில் நான் இதனைத் தெரியப்படுத்தினேன். விருப்பம் இருந்தால் செல்லும், இல்லையேல் விட்டுவிடும்"என்றது பூனை.

## பசிக்கு உணவு

பூனை தெருவைக் கடந்த பின்னர் நாயானது தன எஜமானரின் வீட்டை நோக்கிச் சென்றது. வீட்டில் நாயின் தட்டில் எந்த உணவும் வைக்கப்படவில்லை. தட்டு காலியாகவே இருந்தது. அதனைப் பார்த்த நாய் "என்ன இது! எப்போதுமே எஜமான் எனக்கு உணவுவைத்துவிட்டுத் தானே வெளியே செல்வார்! இப்போது எந்த உணவும் வைக்காமல் வெளியே சென்றுவிட்டாரே! அவர் எப்போது திரும்பி வருவார் என்றும் தெரியவில்லையே! அதுவரையிலும் நான் பசியோடு இருக்கவேண்டியது தானா?" என்று கவலையடைந்தது.






ஒருவேளை வெளியில் சென்ற எஜமான் மீண்டும் திரும்பி வந்து நமக்கு உணவு தருவாரோ என்று நினைத்தபடி எஜமானின் வருகையை எதிர் நோக்கிக் காத்துக்கொண்டிருந்தது. வெகுநேர-மாகியும் கூட எஜமானர் வந்து தனக்கு உணவுதராமல் இருப்பதைக் கண்டு நாய் வருத்தமடைந்தது.

“ஐயோ! பசியோ வேறு என் வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருக்கிறது. உணவு இல்லாமல் எவ்வளவு நேரம்தான் இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது. எப்படியாவது நம் பசியைப் போக்க வேண்டுமே! மயக்கம் வருவதுபோல் இருக்கின்றதே!” என்று தவித்துக்கொண்டிருந்தது நாய்.

அந்தநேரம் பக்கத்துத் தெருவில் இருந்து திருமணவீட்டின் விருந்து உணவின் வாசனை நாயின் மூக்கைத் துளைத்தது. உடனே நாயானது தன் எஜமானரின் வீட்டைவிட்டு வெளியேறியது. வேகமாகத் திருமணவீட்டின் பின்புறம் சென்றது. அங்கே ஏராளமான எச்சிலிலைகள் கொட்டப்பட்டிருந்தன. விருந்தினர்கள் சாப்பிட்டது போக மீதமிருக்கின்ற உணவும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தது. பசிமயக்கத்தில் சென்ற நாய் அந்த உணவினை லபக்..லபக்.. லபக்..என்று சாப்பிடத் தொடங்கியது.



தன் வயிறுபுடைக்கச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிய நாயின் எதிரே பூனை வந்தது. பூனையைக் கண்டதும் திடுக்கிட்டது நாய். “நாயே! எச்சில் இலைகளின் உணவினை ஒருபோதும் சாப்பிடமாட்டேன் என்று வீராப்புப் பேசினாயே! இப்போது பசிநேரத்தில் இந்த உணவுதானே உனக்குக் கை கொடுத்தது.

**பசிவந்தால் பத்தும் பறந்துபோகும் என்று மனிதர்கள் கூறுவார்கள். அந்தப் பத்தில் மானம், ரோஷம், வீராப்பானபேச்சு எல்லாமே அடங்கும்.** எனவே உன் பசியைப் போக்கவல்ல உணவை எச்சில் உணவு என்று ஏளனம் செய்யாதே!'' என்றது பூனை. அதைனைக் கேட்ட நாயும் தவறை உணர்ந்துகொண்டது.

தொகுப்பு: **க. கலைவாணி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

**உண்மைச் சம்பவம்**




தன் உயிரையும் பொருட்படுத்தாது, தன் நண்பர்களின் உயிரைக் காப்பாற்றுவதே பெரிதென எண்ணிச் செயற்பட்டு, இந்தியாவிலே சிறுவர்களுக்காக வழங்கப்படும் நாட்டின் வீரதீரசாகசச் செயலுக்கான (நஷனல் பிரேவரி அவார்டு) சஞ்சய் சோப்ரா விருதினைப் பெற்றுக்கொண்ட துணிகரச்சிறுவன் ஓம் பிரகாஷைப் பற்றித் தெரியுமா?

## உயிர் காத்த வீரச் சிறுவன்

தரம் ஏழில் கல்விபயிலும் ஓம் பிரகாஷ் யாதவ் இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு விவசாயியின் மகன். 2010ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி வழமைபோல் தன் சகநண்பர்களுடன் பாடசாலைப் போக்குவரத்து வண்டியில் சென்றுகொண்டிருந்தான். அப்போது திடீரெனவண்டி தீப்பிடித்தது. வாகனத்தின் சாரதியோ அதிலிருந்த பள்ளிச் சிறுவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் கதவைத் திறந்துகொண்டு தப்பி ஓடிவிட்டார்.

ஆனால் ஓம் பிரகாஷ் துணிந்து செயற்பட்டான். பயத்தில் அரற்றிய நண்பர்களைக் காப்பாற்றத் தொடங்கினான். கதவை உடைத்து ஒவ்வொரு மாணவனாக வெளியேவர உதவி செய்தான்.

கடைசி நேரமுயற்சியின் போது வண்டிக் கதவின் ரப்பரில் இருந்த தீ ஓம் பிரகாஷின் கன்னத்திலும், முதுகிலும், தோளிலும் பட்டு பயங்கரமாக எரிந்தது. ஆனால் அதை அவன் சட்டைசெய்யவில்லை. அந்தவலியையும், வேதனையையும் விட



தன் நண்பர்கள் உயிரே பெரிதென நினைத்த ஓம் பிரகாஷ் நண்பர்களைக் காப்பாற்றி வெளி-யேறும் போது வண்டி முற்றாக எரிந்துவிட்டது.

தனக்குத் தீக்காயம் ஏற்பட்டவுடன் பயந்துபோய் பாதியிலேயே தனது முயற்சியைக் கைவிட்டிருந்தால் ஒன்றிரண்டு மாணவர்கள் தீக்குப் பலியாகியிருப்பர். வாயு மூலம் (காஸ் சிலிண்டர்) ஓடும் வண்டி என்பதால் எந்நேரமும் வெடித்துச் சிதறும் அபாயம் இருந்தது.

இதையெல்லாம் பொருட்படுத்தாது சிறுகாயங்களுடன் தனது நண்பர்களைக் காப்பாற்றிவிட்ட பெருமிதத்துடன் நின்ற ஓம் பிரகாஷுக்கு அப்போதுதான் முகத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் கொடூரம் புரிய ஆரம்பித்தது. இதற்குள் அக்கம் பக்கத்தில் இருந்து திரண்டுவிட்ட மக்கள் அவனை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர்.

நீண்ட சிகிச்சைக்குப் பின் ஓம் பிரகாஷ் உயிராபத்தின்றிப் பிழைத்துக் கொண்டாலும் நடந்த சம்பவம் காரணமாக ஏற்பட்ட வடு அழிக்கமுடியாத அளவிற்கு அவனது முகத்தைச் சிதைத்துவிட்டது. ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. தன்னால் உயிர் பிழைத்த நண்பர்களும், அவர்களது பெற்றோரும் உறவினர்களும் மற்றுமுள்ள பள்ளிநண்பர்களும் ஆசிரியர்களும் பூங்கொத்துடன் தன்னைச் சந்தித்து வாழ்த்துக் கூறியதையும் கண்ணீருடன் நன்றியைப் பகிர்ந்து கொண்டதையுமே பெருமையாக நினைத்தான். விபத்தினால் ஓம் பிரகாஷ் ஒருவருடக் கல்வியை இழந்தான். சிகிச்சைகளின் காரணமாக அவனால் பள்ளிக்குச் செல்லமுடியவில்லை.

ஆனால் அவனிடம், "மீண்டும் இவ்வாறான துணிகரச் செயல்களில் ஈடுபடுவாயா?" என்றுகேட்டால், புன்னகையுடன் "ஆம்" என்றே பதிலளிக்கிறான் சிறுவன்.



இச்செயலால் இவனைப் பெற்றவர்கள் பெருமையாக நினைத்தார்கள். சிறுவர்களுக்காக வழங்கப்படும் நாட்டின் வீரதீரசாகசச் செயலுக்கான 'நஷனல் பிரேவரி அவார்டு' எனும் தேசியவிருதினை பாரத ஜனாதிபதி வழங்கிக் கௌரவித்தார். தன் செயல் மூலம் இளைஞர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறான் இச்சிறுவன்.

இவ்வாறே நரேனும் சிறுவனாக இருந்தபோது வேகமாக ஓடும் வண்டியில் அகப்பட இருந்த சிறுவனை, தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் வண்டியின் முன் குதித்துக் காப்பாற்றினார்.


நரேனுக்கு ஆறுவயது இருக்கும் போது ஒருநாள் தன் உறவுக்கார சிறுவன் ஒருவனுடன், ஒரு திருவிழாவிற்குப் போயிருந்தான். அங்கிருந்து சிவபெருமான் பொம்மைகளை வாங்கிக் கொண்டு இருவரும் வீடு திரும்பிய போது அக்கூட்டத்தில் நண்பனைக் காணவில்லை. நரேன் தேடிப் பார்த்தான். அவன் கண்களில் பட்டது பாய்ந்து வந்த குதிரை வண்டி ஒன்று. குதிரையின் கண்களில் சிக்க இருந்தான் நண்பன்.

நரேன் தன் உயிரைப் பற்றியும் யோசிக்கவில்லை. ஒரு நிமிடமும் தாமதிக்கவும் இல்லை. பொம்மையை அப்படியே இடது அக்குளில் வைத்துக் கொண்டு, பாய்ந்து ஓடினான். வலது கையால் நண்பனை இழுத்தபடி புரண்டு வீழ்ந்தான். நண்பனை ஆபத்தில் இருந்து காத்தான்.

ஆக்கம்: **வ. வானதி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


# வாழ்க்கையில் வெற்றி

காலம் விரைந்து கொண்டிருந்தது. காலத்தின் அருமையை உணர்ந்து அதைப் பயன்படுத்திச் செயற்படுபவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். அரிய செயல்களைச் செய்ய வேண்டுமானால், மனம் ஒருமுகப்பட வேண்டும். மன இறுக்கம் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு முட்டுக்கட்டை.



எந்தவொரு செயலை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதனால் ஏற்படும் நல்லனவற்றையும், அல்லனவற்றையும் ஆராய்ந்து தீர்மானித்து, உரிய காலம் அறிந்து செயற்பட வேண்டும். எவரிடமும் இனிமையாகப் பேசுவது தான், வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான முதல்படி. பிறரை அனுசரித்து வாழ்பவர்கள், விட்டுக் கொடுத்து வாழ்பவர்கள், சரியாகவும், ஆழமாகவும், சிந்திப்பவர்கள், உழைப்பும் முயற்சியும் உள்ளவர்கள் மட்டுமே வெற்றிகளைக் குவிக்கிறார்கள்.

எந்த அளவுக்கு உயர்வான சிந்தனைகள் நம்மிடம் இருக்கின்றனவோ, அந்த அளவுக்கே நாம் சாதனைகளைப் படைக்க முடியும். உள்ளத்தின் ஊக்கத்திற்கு ஏற்பவே ஒருவன்




மேற்கொள்ளும் முயற்சிகள் அமைகின்றன. ஒருவன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஏற்பவே அவன் பெறும் வெற்றிகளும் அமைகின்றன. எனவே ஊக்கம் தான் வெற்றிகள் அனைத்திற்கும் மூலமாக விளங்குகிறது.

நாம் உயர்ந்தவராக விரும்பினால் உயர்ந்தவற்றையே நாம் சிந்திக்க வேண்டும், நாம் உயர்ந்தவற்றையே பேச வேண்டும், உயர்ந்தவற்றையே நாம் செயல்படுத்த வேண்டும்.

தீட்டத் தீட்டத் தான் வைரம் ஜொலிக்கும்; சுடச் சுடத் தான் பொன் ஒளிரும்; அரைக்க அரைக்கத் தான் சந்தனம் மணக்கும்; உழைக்க உழைக்கத் தான் மனிதன் உயர்வு பெறுகிறான். தோல்வி என்பது ஒரு பாடம். பல அறிவியல் கண்டுபிடிப்புகள் பல பரிசோதனைகளின் தோல்விகளிலிருந்து கிடைத்த வெற்றிகள் தான். துன்பப்படாமல், உழைக்காமல், சிரமப்படாமல் உலகில் அரிய சாதனைகளைப் படைக்கவே முடியாது.



திண்ணிய நெஞ்சம் உடையவர்கள், வைரமுடைய நெஞ்சம் உடையவர்கள் மகத்தான வெற்றியாளர்களாகத் திகழ்வார்கள். அலைபாயும் மனம் உள்ளவர்கள் தோல்வியைத் தழுவுபவர்களாக இருப்பார்கள். குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசுவதும், குடத்திலிட்ட விளக்காக ஒளி மங்கிப் போவதும் அவரவர் கையில் தான்.

ஊக்கம் இல்லாதவனிடம் ஆக்கமும் இல்லை, செழிப்பும் இல்லை. "நீங்கள் இறைவனின் பிள்ளைகள். வாருங்கள், வந்து ஏதாவது வீரச்செயலைச் செய்யுங்கள். நீங்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நீங்கள் அனைவரும் மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காகப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள்." என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.




சிரமங்களைத் தொடர்ந்து சென்று சிகரங்களை அடைவேன். வாழ்க்கையில் நான் நிச்சயம் வெற்றி பெற்றே தீருவேன், என்னால் எதையும் சாதிக்க முடியும்,

அரிய சாதனைகளைப் படைக்கும் வாழ்க்கையாக என் வாழ்க்கையை நான் அமைத்துக் கொள்வேன். முயற்சியின்றி மூலையில் முடங்கியிருக்ககக் கூடாது; தேடாமல் கிடைக்காது - தட்டாமல் திறக்காது. நாம் தன்னம்பிக்கையுடன், தளராத முயற்சியுடன் திட்டமிட்டு உழைக்கவேண்டும். எனவே மாணவர்களாகிய நாமும் தோல்வி வந்தாலும் துவண்டுவிடாமல் உழைப்போம்.

ஆக்கம்: **சி. சாம்பவி**, தரம் 11
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## படம் தரும் பாடம்

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



# செய்திகள்



டிசம்பர் 6ஆம் திகதியன்று, ஆசிரமத்தில் கார்த்திகைத் தீபம் அனுஷ்டிக்கப்பட்டது.

---



டிசம்பர் 13ஆம் திகதி அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஜெயந்தி தினம், ஆசிரமத்தில் பூஜை, பஜனை, ஹோமம் போன்ற நிகழ்வுகளுடன் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.





டிசம்பர் 14ஆம் திகதி எமது ஞாயிறு பாடசாலை மாணவர்களால் அன்னையின் ஜெயந்தி தினம் பேச்சு, பஜனை, நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளோடு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

---




டிசம்பர் 24ஆம் திகதியன்று யேசு கிறிஸ்துவின் ஜனன தினமாகிய நத்தார் தினத்திற்கு முன்னைய நாள் மாலை வேளையில் கூட்டுப் பிரார்த்தனையும் பைபிள் நூல் வாசிப்பும் இடம் பெற்றது.

---

ஜனவரி முதலாம் திகதி, கல்பதரு தினமும் வைகுண்ட ஏகாதசியும் ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

---



ஜனவரி 12ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம், ஆசிரமத்தில் பூஜை, பஜனை, ஹோமம் போன்ற நிகழ்வுகளுடன் அனுஷ்டிக்கப்பட்டது.




ஜனவரி 18ஆம் திகதி ஞாயிறு பாடசாலை மாணவர்களால் சுவாமிஜியின் ஜெயந்தி தினம் பேச்சு, பஜனை, உரையாடல் போன்ற கலை நிகழ்ச்சிகளோடு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.




---

ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் விழா ஆசிரமத்தில் கொண்டாடப்பட்டது.

நவம்பர் 4ஆம், 5ஆம், 30ஆம் திகதிகளிலும், டிசம்பர் 18ஆம், 27ஆம் திகதிகளிலும் மற்றும் ஜனவரி 4ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளிலும் முறையே சுபோதானந்தர், விக்ஞானானந்தர், பிரேமானந்தர், சிவானந்தர், சாரதானந்தர், துரியானந்தர், ப்ரஹ்மானந்தர், த்ரிகுணாதிதானந்தர் ஆகியோரது ஜெயந்தி தினம் ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



'அறநெறி அமுதம்' காலாண்டு சஞ்சிகையின் 14ஆவது அமுதத்தின் 4ஆவது துளியான 56ஆவது இதழ் கடந்த நவம்பர் 07ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம், உரும்பிராய் இந்துக் கல்லூரியின் கற்பக விநாயகர் கலையரங்கில் உயர்திரு. சி. சத்தியசீலன் (செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்) அவர்களால் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்), ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மஹராஜ், ஆகியோர் நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாகவும்,
திரு செ. உதயகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), திரு சு. கிருஷ்ணகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி) திரு சி. நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி) திரு செ. சந்திரராஜா (வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்) திரு தி. ஜோன் குயின்டஸ் (வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்) மற்றும் பாடசாலை அதிபர் திரு. அ. அருள்நந்திசிவம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது நிறுவனத் தலைவர்களும் வருகை தந்திருந்தனர்.



கடந்த பதினான்கு வருடங்களாகக் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையிலேயே வெளியிடப்பட்டுவந்த இச் சஞ்சிகை முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த இதழில் **'உங்கள் கருத்து'** எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு எமது இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையைச் சேர்ந்த தரம் 10 மாணவன் வோ.ராகுல் எழுதிய கருத்து...



இப்படத்தைப் பாருங்கள். இதன் மூலம் எம் மனத்தில் என்ன தோன்றுகிறது? ஒரு சிறுவன், காலில்லா அங்கவீனர் ஒருவர் சக்கர நாற்காலியுடன் பாதையில் உள்ள தடையைத் தாண்டிச் செல்ல முடியாமல் இருப்பதைக் கண்டுஅவருக்குப் பாதையைக் கடக்கத் தன்னாலான உதவியைச் செய்கிறான்.

இன்று நம்மில் பலர் எந்த ஒரு வேலையைச் செய்ய முன்பும் சுயநலத்துடன் அவ் வேலையினால் தனக்கு நன்மையுண்டா அல்லது தமக்குப் பொருள் கிடைக்கிறதா என எண்ணுகின்றனரே அன்றி, மற்றவருக்கு உண்டாகும் நன்மை, தீமைகளை சீர் தூக்கிப் பார்ப்பதில்லை. ஆனால் இச் சிறுவனோ சுயநலமின்றி, உதவி தேவைப்படுவோருக்கு உதவ வேண்டும் என எண்ணம் கொண்டு அந்த மாற்றுத்திறனாளிக்கு உதவி செய்கிறான். சிறுவனாகிலும் இவனுக்கு உள்ள இந்த இரக்கமும் உதவும் மனப்பாங்கும் முயற்சியும் இன்று எம்மில் பலருக்குத் துளியும் இல்லை.

இச் சிறுவனின் செயல் இன்றைய உலகில் போற்றத்தக்க செயலாகும். துன்பத்தில் இருப்போருக்கு உதவி செய்வது அந்த இறைவனுக்கு சேவை செய்வதற்கு சமமாகும். இதையே விவேகானந்தர் "ஜீவ சேவையே சிவ சேவை" என்று கூறுகிறார். நாம் அனைவரும் எப்போதும், எல்லோருக்கும் எம்மாலான உதவியைச் செய்வோமாக.

## உங்கள் சிந்தனைக்கு...

ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் முதல் ஜனாதிபதியான ஜோர்ஜ் வாஷிங்டன் (George Washington) ஒருநாள் தனது குதிரை வண்டியில் சென்றுகொண்டிருந்தார். அந்தவழியில், ஓர் இராணுவ அதிகாரியின் மேற்பார்வையில் சில வீரர்கள் கடினமான வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். அவ்வீரர்கள் கனமான வெட்டுமரங்களை (timber blocks) மிகுந்த சிரமத்துடன் தூக்க முயன்று கொண்டிருந்தனர். இன்னும் ஒரு மனிதன் அவர்களுக்கு உதவி செய்தால் அவ்வேலை சற்று சுலபமாக முடியும். ஆனால் இராணுவ அதிகாரியோ அவர்களுக்கு உதவாமல், தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

இதைக்கண்ட வாஷிங்டன் வண்டியிலிருந்து இறங்கி நேராக அங்கு சென்று அவர்களுக்கு உதவியாகத் தோள் கொடுத்தார். அவருடைய உதவியால் அவ்வீரர்கள் வெட்டுமரத்தை சிரமமின்றித் தூக்கினர். வேலை முடிந்த பின் வாஷிங்டன் அந்த இராணுவ அதிகாரியிடம், "இது போன்ற வேலைகளுக்கு மீண்டும் என் உதவி தேவைப்பட்டால், தயவு செய்து ஒரு வார்த்தை எனக்குச் சொல்லியனுப்பவும்." என்று கூறிவிட்டுச் சென்றார். இவ்வாறு உதவியவர் ஜனாதிபதி தான் என்று தெரிய வந்ததும் இராணுவ அதிகாரி மிகவும் வேதனையடைந்தார். அன்றுமுதல் அவர், மனிதநேயத்துடனும் கருணையுடனும் வாழத் தொடங்கினார்.

---

எதிர் காலத்தில் உயர்ந்த பதவிகளை வகிக்கப்போகின்ற இளைஞர்களாகிய நாம் சிந்திக்க வேண்டிய முக்கிய பண்பு இது.

"என் இளைஞர்களே! அன்புடையவனைத் தவிர, பிறர் வாழ்பவர்கள் அல்ல. மற்ற மனிதர்களுக்காகச் சிறிதும் இரக்கம் காட்டாதவர்களை மனிதர் என்று நினைக்கலாமா? உன்னைத் தியாகம் செய்வதனால் மட்டுமே பிறரின் இதயங்களை நீ வெல்லமுடியும்."

–சுவாமி விவேகானந்தர்–

அன்பளிப்பு ரூ. 10.00